

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (30.6.2025) சென்னை, தாளமுத்து நடராஜன் மாளிகையிலுள்ள சி.எம்.டி.ஏ. அலுவலகக் கூட்டரங்கில் திருவள்ளூர் மாவட்டம், குத்தம்பாக்கத்தில் புதிதாக கட்டப்பட்டு வரும் புறநகர் பேருந்து முனையத்தில் பயணிகளுக்கு செய்யப்படவேண்டிய அனைத்து அடிப்படை வசதிகள் குறித்து துறைச் சார்ந்த அரசு உயர் அலுவலர்களுடன் ஒருங்கிணைப்புக் கூட்டம் அமைச்சர் .பி.கே.சேகர்பாபு தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் எம்.கே.மோகன் எம்.எல்.ஏ., சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் முதன்மைச் செயலாளர் கோபிரகாஷ். போக்குவரத்து ஆணையர் முதன்மைச் செயலாளர் சுன்சோங்கம் ஐடக், உயரதிகாரிகள் டாக்டர் டி.ஜி.வினய், டாக்டர் கீ.சு.சமீரன், அ.சிவஞானம் , ஆவடி காவல் கூடுதல் ஆணையாளர் திருமதி.கே.பவானீஸ்வரி, சிறப்பு அலுவலர் ஐ.ஜெயக்குமார். போக்குவரத்து கழக உயரதிகாரி டாக்டர் தபிரபுசங்கர், திருவள்ளூர் மாவட்ட ஆட்சித்தலைவர் பிரதாப் , மாநகராட்சி துணை ஆணையர் (பணிகள்) வ.சிவகிருஷ்ணமூர்த்தி, வடக்கு வட்டார துணை ஆணையாளர் .கட்டா ரவி தேஜா, மத்திய வட்டார துணை ஆணையாளர் எச். ஆர்.கௌஷிக், தேசிய நெடுஞ்சாலைத் துறை (NHAI) திட்ட இயக்குநர் திருமதி.எ.சாவித்திரி தேவி. அரசு விரைவு போக்குவரத்துக் கழக (SETC) மேலாண்மை இயக்குநர் ஆர்.மோகன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

## விழுப்புரம் தெற்கு மாவட்டம் ஏரளூரில் பொதுக்கூட்டம்

### க.பொன்முடி சிறப்புரை!

விழுப்புரம், ஜூலை 1 - விழுப்புரம் தெற்கு மாவட்டம், திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதி, திரு வெண்ணெய்நல்லூர் மேற்கு ஒன்றிய இளைஞர் அணி தி.மு.க சார்பில் ஏரளூர் ஊராட்சியில் நடைபெற்ற முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் மற்றும் நான்காண்டு சாதனை விளக்கப் பொதுக்கூட்டத்தில் கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ. விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் பொன் கௌதமசிகாமணி, தலைமைக் கழக பேச்சாளர் தூத்துக்குடி க.சரத்பாலா ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பு ரையாற்றினார்கள்.

நிகழ்ச்சியில் ஆர்.கற்பகம், பக்தவச்சலு, பி.வி.ஆர்.சு.விசுவநாதன், செ.தினகரன், பூக்கடை கணேசன், ஓம்சிவசக்திவேல், நிர்மல்ராஜ், ஜோதி, கிருஷ்ணராஜ், சிறுவானூர் பரசுராமன், தேவா, மோகன், எம்.ஜெ.கிருஷ்ணாமூர்த்தி, சடகோபன் , காசி.விஸ்வ நாதன், ஏழுமலை, மோகன்ராஜ், சுதா சினிவாசன், மாதவன், சரவணன், பாலாஜி , பிரபாகரன், உதயசூரியன், ஐயப்பன், வினோத்புகழேந்தி, விஜய், சக்கரபாணி, முருகன் மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.



சைதை கிழக்கு பகுதி இளைஞர் அணி திமுக சார்பில் பகுதி அமைப்பாளர் கொடி கே.பாலா தலைமையில் நடைபெற்ற கலைஞர் 102 – வதுபிறந்தநாள் விழா பகுதி செயலாளர்கள் இரா.துரைராஜ், எம்.கிருஷ்ணமூர்த்தி, வட்ட கழக செயலாளர்கள் தா.மோகன்குமார் நா. ராதாகிருஷ்ணன் முன்னிலையில் இளைஞர் அணி நிர்வாகிகள் கோட்டூர் எஸ்.பிரகாஷ், ஆர்.கிருஷ்ணகுமார், மே.குணா, பா.பரத்குமார், ப.அருண்குமார், தி.கோகுலன், கோ.ராஜன், ராஜா சம்பத் ஆகியோர் வரவேற்புரையில் நடைபெற்றது கூட்டத்தில் அமைச்சர் மா. சுப்பிரமணியன் கோ.வி.லெனின், டெக்சின், ரொமாரியோ, துணை மேயர் மு.மகேஷ்குமார், எஸ்.ஜோயல்,ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, மின்னல் கந்தப்பன், மா.அன்பரசன் களக்காடி எல்லப்பன், இ.முருகேசன், மு.ஆரோகாகியம், மு.பாக்கியலட்சுமி, எல்.ஆரோக்கியராஜ்,க.மணி, எஸ். பாட்சா, ஆ.வரதன், வே.முருகன், ஜி.செல்வராஜ், நா.மணிகண்டன் ,க.ஒப்பிலாமணி, கோ.தனசேகரன் மற்றும் பலர் பங்கேற்றனர்.




# தி.மு.க. இளைஞர் அணி

## முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்த நாள் & திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!

### கோவை தெற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.வி.கே.எஸ்.சபரி கார்த்திகேயன் அறிவிப்பு!

கழக இளைஞர் அணியின் மாவட்ட மாநகர – மாநில அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படியும் கழக இளைஞர் அணிச் செயலாளர் மாண்புமிகு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முரசொலியில் வெளியிட்ட அறிவிப்பின்படியும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102–வது பிறந்த நாளை முன்னிட்டு, தமிழர் நலன் காத்த அவரின் புகழ் பரப்பும் வகையிலும், கழகத் தலைவர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையிலான திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை விளக்கியும், கழகப் பேச்சாளர்கள் மற்றும் இளம் பேச்சாளர்களைக் கொண்டு கோவை தெற்கு மாவட்டத்தில் உள்ள ஒன்றியம்–நகரம்–பகுதி–பேரூர்களில் தெருமுனைக் கூட்டங்கள், ஏற்கெனவே தொடங்கி நடைபெற்று வருகின்றன.

அதன் தொடர்ச்சியாக நடைபெற உள்ள தெருமுனைக் கூட்டங்களின் விவரம் வருமாறு:–

| வ. எண் | நாள் | ஒன்றியம் / நகரம் / பகுதி / பேரூர் | இடம் | பேச்சாளர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 03.07.2025 | பொள்ளாச்சி தெற்கு நகரம் | அன்பு சில்க்ஸ் எதிரில் | சகா விக்னேஷ்<br>சி.கா.சுகன் மந்த்ரன் |
| 2 | 03.07.2025 | பெரிய நெகமம் பேரூர் | கே.கே.நகர் | சகா விக்னேஷ்<br>சி.கா.சுகன் மந்த்ரன் |
| 3 | 05.07.2025 | குறிச்சி தெற்குப் பகுதி | அண்ணா சிலை அருகில்,<br>காந்தி நகர். | நாகநந்தினி<br>எஸ்.இம்ரான்கான் |
| 4 | | குறிச்சி வடக்குப் பகுதி | அண்ணா சிலை அருகில்,<br>ஐயர் மருத்துவமனை. | வழக்கறிஞர் ஆர்.தென்னை சிவா<br>எஸ்.இம்ரான்கான் |
| 5 | | வெள்ளலூர் பேரூர் | சொரூபராணி மைதானம் | சிவாஜி கிருஷ்ணமூர்த்தி<br>எஸ்.இம்ரான்கான் |
| 6 | 06.07.2025 | கிணத்துக்கடவு மேற்கு | மணிகண்டபுரம் | உடுமலை தண்டபாணி<br>ச.பூங்கொடி |
| 7 | | கிணத்துக்கடவு பேரூர் | பழைய பேருந்து நிலையம்,<br>அண்ணா திடல். | உடுமலை தண்டபாணி<br>ச.பூங்கொடி |
| 8 | | தொண்டாமுத்தூர் கிழக்கு ஒன்றியம் | ஆறுமுகக் கவுண்டர்<br>தண்ணீர் டேங்க் அருகில் | ஆம்பூர் தர்மன்<br>பி.கவிஸ்ரீ |
| 9 | | கண்ணம்பாளையம் பேரூர் | பேருந்து நிலையம், ஆலமரம். | கோட்டூர் முருகன்<br>பி.கவிஸ்ரீ |
| 10 | | பள்ளபாளையம் பேரூர் | காந்தி நகர் | கி.அ.ராஜன்<br>பி.கவிஸ்ரீ |
| 11 | | இருகூர் பேரூர் | சுங்கம் மைதானம் | சிங்கை சௌந்தர்ராஜன்<br>பி.கவிஸ்ரீ |
| 12 | 08.07.2025 | கருமத்தம்பட்டி நகரம் | பவர் ஹவுஸ் கார்னர் | சிங்கை சௌந்தர்ராஜன்<br>பி.கவிஸ்ரீ |
| 13 | | சாமளாபுரம் பேரூர் | ஈஸ்வரன் கோயில் | ஆரணி மாலா<br>பி.கவிஸ்ரீ |
| 14 | | சூலூர் பேரூர் | புதிய பேருந்து நிலையம் | ஆரணி மாலா<br>எஸ்.இம்ரான்கான் |
| 15 | 12.07.2025 | சூலூர் வடக்கு ஒன்றியம் | பேருந்து நிலையம், மாதப்பூர். | குரும்பை கனகராஜ்<br>எஸ்.இம்ரான்கான் |
| 16 | | மோப்பிரிபாளையம் பேரூர் | சின்ன மோப்பிரிபாளையம் | கோவை சம்பத்<br>எஸ்.இம்ரான்கான் |
| 17 | | சூலூர் மேற்கு ஒன்றியம் | பேருந்து நிலையம், நீலாம்பூர். | பெரம்பலூர் விஜயரத்தினம்<br>ச.பூங்கொடி |

கோயம்புத்தூர்

நாள் : 30.06.2025

கலைஞர் 100 1924 - 2023




# தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளில் அமலுக்கு வந்தது 'வாட்டர் பெல்' திட்டம்!

## தண்ணீர் குடிக்க தினமும் 3 இடைவேளை!

சென்னை, ஜூலை 1 – தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளில் 'வாட்டர் பெல்' திட்டம் அமலுக்கு வந்தது. காலை 11 மணி, பிற்பகல் 1 மணி, மாலை 3 மணி என 'பெல்' ஒலிக்கும்போது மாணவர்கள் தவறாது தண்ணீர் அருந்த வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. உடல் நீரிழப்பு மாணவர்களின் அறிவாற்றல், கவனம் மற்றும் கல்வி செயல்திறனை கணிசமாக பாதிக்கும். எனவே, பள்ளிகளில் தண்ணீர் நுகர்வுக்கு மாணவர்களை ஊக்குவிப்பது பல்வேறு நன்மைகளைத் தரும். இதையடுத்து, மாணவர்கள் தண்ணீர் குடிப்பதை ஊக்கப்படுத்தும் விதமாக 'வாட்டர் பெல்' திட்டம் அறிமுகம் செய்து 5 நிமிடம் ஒதுக்கப்படும் என்று பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் நேற்று முதல் தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளில் 'வாட்டர் பெல்' திட்டம் அமலுக்கு வந்தது. இந்த திட்டத்தின்கீழ் பள்ளியில் ஒரு நாளைக்கு 3 முறை தண்ணீர் இடைவேளை மணி அடிக்கப்படும். இது வழக்கமான சத்தத்தில் இருந்து மாறுதல் ஒலியில் ஒலிக்கப்படும். குறிப்பாக காலை 11 மணி, மதியம் 1 மணி, மாலை 3 மணிக்கு வாட்டர் பெல் அடிக்கப்படும். அப்போது குழந்தைகள் தண்ணீர் அருந்த ஊக்குவிக்கப்படுவர். எனினும் பள்ளிகளின் இடைவேளை நேரத்தைப் பொறுத்து நேரத்தை மாற்றிக் கொள்ளலாம் என்று அரசு சார்பில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

பெல் அடித்தவுடன் வகுப்பறைகளில் தண்ணீர் அருந்த 2 முதல் 3 நிமிடங்கள் அளிக்கப்படும். இதற்காக வகுப்புகளுக்கு வெளியே மாணவர்கள் செல்லக் கூடாது. வகுப்புச் சூழல்களுக்கு இடையூறு நேராதவாறு உள்ளேயே தண்ணீரை அருந்த வேண்டும். பள்ளிகளுக்கு மாணவர்கள் வாட்டர் பாட்டிலை கட்டாயம் கொண்டுவர வேண்டும் உள்ளிட்ட வழிகாட்டு நெறிமுறைகளும் வழங்கப்பட்டுள்ளன.

## மண்ணைக் காக்க – மானம் காக்க – மொழியைக் காக்க!

# திருவண்ணாமலையில் "ஓரணியில் தமிழ்நாடு"மாபெரும் பொதுக்கூட்டம்!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி சிறப்புரை!

திருவண்ணாமலை. ஜூலை1- திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மண்ணைக் காக்க - மானத்தைக் காக்க - மொழியைக் காக்க "ஓரணியில் தமிழ்நாடு" மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது. பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் சிறப்புரையாற்றுகிறார்.

நாளை (02.07.2025 புதன்கிழமை) மாலை 5.00 மணிக்கு, திருவண்ணாமலை, வேட்டவலம் சாலை, திருவள்ளுவர் சிலை அருகில், திருவண்ணாமலை தெற்கு, வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மண்ணைக் காக்க - மானத்தைக் காக்க - மொழியைக் காக்க "ஓரணியில் தமிழ்நாடு" மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது.

பொதுக்கூட்டத்திற்கு கழக தணிக்கைகுழு உறுப்பினரும், சட்டப்பேரவை துணைத் தலைவருமான கு.பிச்சாண்டி தலைமை வகிக்கிறார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை, சட்டமன்ற உறுப்பினர்கள் செங்கம் மு.பெ.கிரி, கலசப்பாக்கம் பெ.சு.தி.சரவணன், வந்தவாசி எஸ்.அம்பேத்குமார், செய்யாறு ஒ.ஜோதி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.



வடக்கு மாவட்ட செயலாளர் எம்.எஸ்.தரணிவேந்தன். எம்.பி. அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார்.

பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் சிறப்புரையா ற்றுகிறார்.

பொதுக்கூட்டத்தில் கழக மருத்துவரணி துணை தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், அவைத் தலைவர் கோ.கண்ணன், வடக்கு மாவட்ட அவைத்தலைவர் ஆர்.ராஜசேகர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாநில பொறியாளர் அணி செயலாளர் கு.கருணாநிதி, தலை மைச் செயற்குழு உறுப்பினர்கள் பொன்.முத்து, ஆர். சிவானந்தம், கே.ஆர்.சீதாபதி, கே.வி.ராஜ்குமார், ஆர்.வேல்முருகன், மாநில விவசாய தொழிலாளர் அணிதுணைசெயலாளர் வ.அன்பழகன், மாவட்ட பொருளாளர்கள் எஸ்.பன்னீர் செல்வம், டி.ஏ.தட்சிணா மூர்த்தி, மாவட்ட துணை செயலாளர்கள் ந.பாண்டு ரங்கன், ப்ரியா ப.விஜயரங்கன், க.லோகநாதன், விஜயலட்சுமி ரமேஷ், ஜெயராணிரவி, மாநில தொ.மு.ச., துணைத் தலைவர் க.சௌந்தரராசன், சிவ.ஜெயராஜ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் கே.வி. சேகரன், கோ.எதிரொலிமணியன்,

தெற்கு, வடக்கு மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம். நேரு, காலேஜ் கு.ரவி, ஜெ. மெய்கண்டன், ஏ.ஏ.ஆறுமுகம், ப.அண்ணாமலை, மங்கலம் பிரபாகரன், பொன்.தனுசு, எச்.சாதிக்பாட்சா, கு.கணேஷ், சி. ராம்காந்த், பச்சையம்மன் எஸ்.முத்து, இரா.கார்த்திகேயன், டாக்டர்.பிரவீன்ஸ்ரீதரன், பாலமுரளிகிருஷ்ணா, ஏ.டபள்யு.சர்தார் காசீம், எஸ். டி.ஆர்.எஸ்.பாபு, பி.கே.ஏ. அருண், எல்.ஐ.சி.து.வேலு, கற்பகம்சரவணன், உ.நித்யா, தொ.மு.ச. கவுன்சில் செயலாளர் இரா.ஆறுமுகம்,

வடக்கு மாவட்டம் எவரெஸ்ட் ந.நரேஷ்குமார், இ. எஸ்.டி.கார்த்திகேயன், ஏ.என். சம்பத், என்.கே.ஏ. பாபு, அ. மணிகண்டன், மா.ஏழுமலை, தொ.ப.சீ.மதிவாணன், பி. செல்வ ராஜன், சாது.ஆனந்த், க.சீனுவாசன், ஜி.பி.அசோக், டாக்டர் மகேந்திரன், இ.மணிகண்டன், மாலினிவினோத் திவாகரன், ஐ.எஸ்.அமானுல்லா, ஆர்.ராம்ரவி, ப.க. மணி வண்ணன், அமர் (எ) இப்ராஹிம் ஷெரீப், அப்சல் பாஷா, கே.ஏ.புஷ்ப ராஜ், பி.எஸ்.சாந்தகுமார், இராணி வெங்கடேசன்,

வடக்கு மாவட்ட நகர செயலாளர்கள் ஏ.சி.மணி, கே.விஸ்வநாதன், ஏ.தயாளன், தெற்கு மாவட்ட ஒன்றிய செயலாளர்கள் அ.சிவக்குமார், மு.பன்னீர்செல்வம், வி.பி. அண்ணாமலை, ஆராஞ்சி.ஆறுமுகம், சி.சுந்தரபாண்டியன், மெய்யூர்.சந்திரன், த.ரமணன், பெ. கோவிந்தன், ப.கேசவன், கோ.ரமேஷ், சி.மாரிமுத்து, எஸ்.சிவசேமன், க.சுப்பிரமணி, இரா.ராஜேந்திரன், ஆர். வி.சேகர், கி.ஆறுமுகம், பா. ராமஜெயம், த.செந்தில் குமார், அ.ஏழுமலை, த.மனோகரன்,

வடக்கு மாவட்ட ஒன்றிய செயலாளர்கள் அ.சுப்பிரமணியன், பி.மனோ கரன், ஏ.எழில் மாறன், கே.டி.ராமசாமி, என். டி.மனோகரன், எஸ்.எஸ்.அன்பழகன், எம்.சுந்தர், எஸ். மோகன், துரை.மாமது, ஏ.ஞானவேல், என்.சங்கர், எம். தினகரன், ஜெ.கே.சீனுவாசன், ஏ.ஜி.திராவிட முருகன், எஸ். ரவிக்குமார், டி.ராதா, ப. இளங்கோவன், ஏ.சுந்தரேசன், கே.பி.ஆர்.பி.பழனி, சி.ஆர். பெருமாள், நா.பழனி, அ.தண்டபாணி, க.பிரபாகரன், டி. கென்னடி, கு.பாலசுப்பிரமணி, கா.சு.இளங்கோவன், அன்பரசிராஜசேகரன் வடக்கு மாவட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் ஏ.சி.வி.தயாநிதி, ஏ.எம்.காசி , உட்பட பலர் கலந்து கொள்கின்றனர்.

நிறைவாக மாநகர செயலாளர் ப.கார்த்திவேல் மாறன் நன்றி கூறுகிறார். முன்னதாக மாவட்ட திமுக கலைக்குழு அம்பேத்கரின் இசை நிகழ்ச்சி நடைபெறும்.



"ஓரணியில் தமிழ்நாடு இணையதள உறுப்பினர் சேர்க்கை பயிற்சி பாசறை கூட்டம் அண்ணாநகர் சட்டமன்ற தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கி ணைப்பாளர்கள், புதிதாக நியமிக்கப்பட்ட பாக சமூக வலைத்தள முகவர்கள் (BDA) மற்றும் பாக முகவர்களுக்கு (BLA2) இணையதள வழியாக புதிய உறுப்பினர்களை சேர்ப்பது குறித்து விரிவான ஆலோசனை கூட்டம் மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் எம்.கே.மோகன் எம்.எல்.ஏ., தொகுதி பார்வையாளர் தமிழன் பிரசன்னா, மாவட்ட நிர்வாகிகள் வி.எஸ்.கலை, ஆ.சங்கீதா, பகுதி கழக செயலாளர்கள், ந.இராமலிங்கம், ச.பரமசிவம், தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணை செயலாளர் கார்த்திக் மோகன், பாக சமூக வலைத்தள முகவர்கள் (BDA) மற்றும் பாக முகவர்கள் (BLA2), தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளர்கள், பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழக செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாட்டில் வரும் 5ம் தேதி வரை மிதமான மழைக்கு வாய்ப்பு!

## வானிலை ஆய்வு மையம் தகவல்!

சென்னை, ஜூலை 1 – தமிழகத்தில் வரும் 5ம்தேதி வரை மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழகத்தில் இந்த ஆண்டு மே 4ம் தேதி கத்திரி எனப்படும் அக்னி நட்சத்திரம் தொடங்கியது. வெயில் தாக்கம் அதிகமாக இருக்கும் என எதிர் பார்க்கப்பட்ட நிலையில், கத்திரி வெயில் எப்போது தொடங்கியதோ அன்று முதல் அவ்வப்போது மழை பெய்ததால் வெயிலின் தாக்கம் குறைவாகவே காணப்பட்டது. இந்நிலையில் கத்திரி வெயில் கடந்த மே மாதம் 28ம் தேதி முடிந்தது. இதனால் வெயிலின் தாக்கம் குறையும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் பொதுமக்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

அதாவது கோடை வெயிலை மிஞ்சும் அளவுக்கு கடந்த சில நாட்களாகவே வெயில் வாட்டி வதைத்து வருகிறது. இதனால் பொதுமக்கள் பகல் நேரங்களில் வெளியில் செல்வதை முற்றிலுமாக தவிர்த்து வருகின்றனர். குறிப்பாக நேற்று முன்தினம் தமிழகத்தில் 10 இடங்களில் வெயில் சதம் அடித்தததால், மக்கள் கடும் அவதிக்குள்ளாகினர். அதிகபட்சமாக மதுரை விமான நிலையத்தில் 104.36 டிகிரி பாரான்ஹீட் வெப்பம் பதிவானது.

வெயில் தாக்கம் ஒருபுறம் இருந்தாலும் அவ்வப்போது மிதமான மழையும் பெய்து வருவதும் குறிப்பிடத்தக்கது. இந்நிலையில், மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக இன்று தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மேலும் வரும் ஜூலை 5ம்தேதி வரை தமிழகத்திலும், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் சில இடங்களில் இடியுடன் கூடிய மழை பெய்யும் வாய்ப்பு உள்ளது என்றும் கூறியுள்ளது.